بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 25/06/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு எடுத்துரைக்கப்பட்டு வந்தது. இது தொடர்பாக இன்று மேலும் எடுத்துரைப்பேன்.

**ஸைது பின் அஸ்லம் அவர்கள் தனது தந்தை அஸ்லமிடமிருந்து அறிவிக்கிறார்கள்:** அவர்கள் ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் மதீனாவில் இருந்து 3 மைல் தொலைவில் உள்ள ஸிரார் என்னும் இடத்தில் இருந்தார்கள். அங்கு அவர்கள் ஒரு பயணியை பார்த்தார்கள். இரவும், குளிரும் அந்த பயணியை தடுத்து வைத்திருந்தது. அவர்கள் அருகில் சென்று பார்த்தபோது, ஒரு பெண்ணுடன் அவளுடைய சில குழந்தைகள் இருந்தனர். அடுப்பில் ஒரு பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது. குழந்தைகள் பசியின் காரணமாக நிம்மதியிழந்து அழுது கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த பெண்ணிடம் குழந்தைகள் அழுவதற்கான காரணத்தைக் கேட்டார்கள். குழந்தைகள் பசியின் காரணமாக அழுகின்றனர் என அந்தப் பெண் கூறினாள். இந்தப் பாத்திரத்தில் என்ன உள்ளது? என்று அன்னார் (ரலி) அவர்கள் கேட்டார்கள். இதற்குள் வெறும் தண்ணீர் மட்டுமே உள்ளது. குழந்தைகள் தூங்கும் பொருட்டு இதனைக் கொண்டு நான் அவர்களுக்கு ஆறுதல் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். எங்களுக்கும் உமர் (ரலி) அவர்களுக்கும் இடையில் அல்லாஹ் தீர்ப்பு வழங்குவானாக! என்று அவள் கூறினாள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், பெண்மணியே! அல்லாஹ் உன் மீது கருணை காட்டுவானாக. உன்னுடைய நிலை உமருக்கு எவ்வாறு தெரியும்? என்று கேட்டார்கள். அதற்கு அப்பெண், உமர் எங்களுடைய விவகாரங்களை கண்காணிப்பவராக உள்ளார்; ஆனால் எங்களைப் பற்றி அவர் அறியாமல் உள்ளார் என்று கூறினாள்.

அஸ்லம் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கா மற்றும் மதீனாவுக்கு இடையில் பல சத்திரங்களை கட்டச் செய்திருந்தார்கள். அங்கு பயணிகளுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் இருந்தன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விரைவாகச் சென்று, தானியங்கள் வைக்கப்பட்டிருந்த ஒரு கிடங்கை அடைந்தார்கள். ஒரு மூடை தானியத்தையும், ஒரு டப்பா நெய்யையும் எடுத்துக் கொண்டு இதை தன் மீது தூக்கி வைக்குமாறு கூறினார்கள்.

அஸ்லம் கூறுகிறார்கள்: தங்களுக்கு பதிலாக நான் சுமந்து வருகிறேன் என்று நான் வேண்டினேன். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், என் மீது தூக்கி வையுங்கள் என்று இரண்டு, மூன்று முறை கூறினார்கள். இறுதியில் என்னுடைய வலியுறுத்தலின் காரணமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்னைப் பார்த்து, உமக்கு நன்மை நிகழட்டும்! கியாமத் நாளன்றும் எனது சுமையை நீங்கள் சுமப்பீர்களா? என்று கேட்டார்கள். அதன் பிறகு அன்னார் (ரலி) அவர்கள் அந்த மூடையைத் தூக்கிக் கொண்டு விரைவாக அந்தப்

பெண்ணிடத்தில் சென்றார்கள். அத்துடன் உணவு சமைப்பதில் அந்த ஏழைப் பெண்மணிக்கு உதவி செய்தார்கள். மேலும், குழந்தைகள் வயிறு நிரம்ப உணவு உண்டு, தூங்காத வரை அங்கேயே இருந்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆளுமை, அதிகாரத்தைக் கண்டு கய்ஸர் மற்றும் கிஸ்ராவுடைய அரசுகள் கூட நடுங்கிக் கொண்டிருந்தன. ஆனால் ஒரு காட்டரபி பெண்ணினுடைய குழந்தைகள் பசியோடு இருப்பதைக் கண்டு அன்னார் (ரலி) அவர்கள் நிம்மதியிழந்து விடுகிறார்கள்.

ஆற்றல் இல்லாத மக்களுக்கு, அவர்களுக்கு அவசியமானவற்றை ஏற்படுத்திக் கொடுப்பது இஸ்லாமிய ஆட்சியின் கடமையாகும். தேவையுடையவர்களுக்கு உதவித் தொகைகள் கொடுக்கப்படுவது சோம்பேறித்தனத்தை உருவாக்குவதற்காக அன்று! ஏழைகளைப் பராமரிக்க வேண்டும் என்று கட்டளை இருக்கின்ற அதே வேளையில், கையேந்துவதை விட்டும் இஸ்லாம் மக்களைத் தடுக்கின்றது.

உதவி கேட்ட ஒருவரின் பை மாவினால் நிறைந்திருப்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருமுறை கண்டார்கள். அவ்வாறிருந்தும் அவர் கையேந்திக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நபரிடமிருந்து மாவை வாங்கி ஒட்டகங்களுக்கு முன்னால் போட்டு விட்டு, இப்போது கையேந்து என்று கூறிவிட்டார்கள்.

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அஸ்லம் என்ற இதே அடிமை இன்னொரு சம்பவத்தை எடுத்துரைக்கிறார்கள்:** ஒருமுறை மதீனாவுக்கு வியாபாரிகளின் ஒரு குழு வந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம்முடன் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களை அழைத்துக் கொண்டு அக்குழுவுக்கு காவல் நிற்கச் சென்றார்கள். பச்சிளம் குழந்தையின் அழும் குரல், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நிம்மதி இழக்கச் செய்தது. அக்குழந்தையின் தாயிடம் சென்று குழந்தையை அக்கறையாக பார்த்துக் கொள்ளுமாறு அன்னார் கவனமூட்டினார்கள். ஆனால் குழந்தை அழுகின்ற ஓசை முழு இரவும் கேட்டுக் கொண்டே இருந்தது. காலைப் பொழுதானதும் அன்னார் அந்த பெண்ணுடைய கூடாரத்திற்கு சென்றார்கள். குழந்தை அழுததற்கான காரணத்தைக் கேட்டார்கள். அதற்கு அந்தப் பெண்மணி, பாலை தவிர்த்து பிற உணவுகளின் பக்கம் நான் குழந்தையை திசைதிருப்புகிறேன் ஆனால் குழந்தையோ பாலை மட்டுமே கேட்கிறான் என்று கூறினாள். ஏன் அவ்வாறு? என்று அன்னார் கேட்டார்கள். அந்தப் பெண்மணி, ஏனென்றால் பால் குடிப்பதை நிறுத்திய குழந்தைகளுக்கு மட்டுமே ஹஸ்ரத் உமர் அவர்கள் உதவித் தொகையை நிர்ணயித்துள்ளார்கள் என்று கூறினாள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், உன்னுடைய குழந்தையின் வயது என்ன? என்று கேட்டு விட்டு, பால் கொடுப்பதை நிறுத்துவதில் இவ்வளவு அவசரம் காட்டாதே என்று கூறினார்கள்.

அந்நாளில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு பஜ்ர் தொழுகையை தொழ வைத்தார்கள். அழுகையின் காரணமாக அன்னார் ஓதுவது தெளிவாகப் புரியவில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம்மை பார்த்து, உமருக்கு கேடு நிகழட்டும்! நீர் எத்தனையோ முஸ்லிம் குழந்தைகளைக் கொன்றிருக்கிறீர் என்று கூறிவிட்டு, குழந்தைகளுக்கு பால்குடி நிறுத்துவதில் அவசரம் காட்ட வேண்டாம்; பிறக்கக்கூடிய ஒவ்வொரு குழந்தைக்கும் நாம் உதவித்தொகையை நிர்ணயிக்கிறோம் என்று அறிவிப்பு செய்ய வைத்தார்கள். இக்கட்டளையை முழு நாட்டிலும் அறிவித்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஒரு இரவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நகர்வலம் வந்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெண் காதல் கவிதைகள் பாடுவதைக் கேட்டார்கள். இதைக் குறித்து அன்னார் ஆராயச் செய்த போது, அவளுடைய கணவன் இராணுவத்தில் இருப்பதாக தெரிய வந்தது. நீண்டகாலமாக அவன் வெளியே இருந்தான். இதை அறிந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், எந்த ஒரு படை வீரனும் நான்கு மாதங்களை விட அதிகமாக வெளியே இருக்கக் கூடாது என கட்டளையிட்டார்கள்.

இதேபோன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு இரவில் மதீனாவுக்கு புறநகர்ப் பகுதியில் இருந்தார்கள். ஒரு கூடாரத்திலிருந்து ஒரு பெண்ணுடைய பிரசவ வேதனையின் கூக்குரல் கேட்டது. அன்னார் அப்பெண்ணுடைய நிலையை கேட்டறிந்தார்கள். நான் ஒரு பயணி ஆவேன். வெளியூரைச் சேர்ந்தவள். என்னிடம் ஒன்றுமில்லை என்று அவள் கூறினாள். இதைக்கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது வீட்டிற்கு திரும்பினார்கள். தனது துணைவியார் ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் பின்த் அலீ (ரலி) அவர்களையும், பிரசவத்திற்கு தேவையான பொருட்களையும் எடுத்துக்கொண்டார்கள். அத்துடன் மாவு மற்றும் இறைச்சி போன்றவற்றையும் எடுத்துக் கொண்டு அந்தப் பெண்ணிடத்தில் சென்றார்கள்.

அன்னார் அந்த பெண்ணுடைய கணவருடன் வெளியே அமர்ந்திருந்தார்கள் அப்போது ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் அவர்கள் வந்து, அமீருல் முஃமினீன் அவர்களே! உங்களுடன் இருப்பவரிடம், அவருக்கு மகன் பிறந்திருப்பதாக நற்செய்தி கூறுங்கள் என்றார்கள். ‘அமீருல் முஃமினீன்’ என்ற சொற்களைக் கேட்ட பிறகுதான் உடன் அமர்ந்திருப்பவர் ஹஸ்ரத் உமர் (ரலி) என்று அந்த நபருக்கு தெரியவந்தது.

**ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிக விரைவாக எங்கோ செல்வதை நான் கண்ட போது, அமீருல் முஃமினீன் அவர்களே! தாங்கள் எங்கு செல்கிறீர்கள் எனக் கேட்டேன். சதகாவின் ஒரு ஒட்டகம் ஓடிவிட்டது. அதைத் தேடிக் கொண்டு செல்கிறேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: தாங்கள் தமக்குப் பின்னால் வரக்கூடிய கலீஃபாக்களுக்கு மிகக் கடினமான வழிகளை நிர்ணயித்து விட்டீர்கள்!

அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், என்னை பழித்துரைக்காதீர்கள். முஹம்மது (ஸல்) அவர்களை நுபுவ்வத்துடன் அனுப்பிய அந்த இறைவன் மீது ஆணையாக! ஃபராத் நதியோரத்தில் ஒரு ஆட்டுக்குட்டி வீணாகிப் போனால்கூட கியாமத் நாளன்று அதற்காக உமர் பிடிக்கப்படுவார் என்று பதிலளித்தார்கள்.

ஒரு மிகப்பெரும் கிறிஸ்தவ கோத்திரத்தின் தலைவரான ஜபலா பின் அய்ஹம் என்பவர் முஸ்லிமானார். ஹஜ்ஜின் போது ஒரு ஏழை முஸ்லிமுடைய பாதம் இவருடைய பாதத்தின் மீது பட்டு விட்டது. ஜபலா கோபம் கொண்டு அவரை கன்னத்தில் அறைந்து விட்டார். யாரோ ஒருவர் ஜபலாவைப் பார்த்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த முஸ்லிமுடைய நியாயத்தை உம்மிடமிருந்து வாங்குவார் என்று கூறினார்.

இதைக்கேட்ட ஜபலா ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடத்தில் சென்று, ஒரு மிகப்பெரும் மனிதர் ஒரு சிறிய மனிதரை கன்னத்தில் அறைந்து விட்டால் நீங்கள் என்னவெல்லாம் செய்வீர்கள் என்று கேட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தில் சிறியவர் பெரியவர் என்ற எந்த வேறுபாடும் கிடையாது. ஜபலாவே! நீர்தான் இந்தத் தவறை செய்து விட்டீரா என்ன? என்று கேட்டார்கள்.

இதற்கு ஜபலா பொய் கூறி விட்டார். நான் வெறுமனே அறிந்துகொள்ளும் பொருட்டு ஒரு விஷயத்தைக் கேட்டேன் என்று கூறிவிட்டார். இதைக் கூறிவிட்டு அவர் அங்கிருந்து சென்று விட்டார். அத்துடன் தம் சமுதாயத்துடன் முர்தத் ஆகிவிட்டார். மேலும், இஸ்லாமிய ஆட்சிக்கெதிராக ரோமானியர்களின் போரில் கலந்து கொண்டார். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதை (கொஞ்சம் கூட) பொருட்படுத்தவில்லை.

**இந்த சமத்துவத்தைத்தான் இஸ்லாமிய ஆட்சி நிலைநாட்டியது. இன்றைய இஸ்லாமிய அரசாங்கங்களுக்கும் இதில் படிப்பினை உள்ளது.**

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு இனிவரும் காலத்திலும் தொடரும் என்று கூறிய பிறகு ஹுஸூர் அவர்கள் நான்கு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து, அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள். ஹுஸூர் கூறினார்கள்:*

**முதலாவது ஜனாஸா,** ஜெர்மனி **Waldshut** ஜமாஅத்தினுடைய தலைவரும், சுவிட்சர்லாந்தின் முன்னாள் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவரும், முன்னாள் தர்பிய்யத் செயலருமான மதிப்பிற்குரிய அப்துல் வஹீது வராய்ச் சாஹிப் அவர்கள் மே 12 ஆம் தேதி வெற்றிகரமாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி, அதில் ஜமாஅத் கொடியை பறக்க விட்ட பிறகு கீழே இறங்கிக் கொண்டிருக்கும் போது உடல் நிலை மோசமானதன் காரணமாக 41 ஆம் வயதில் மரணமடைந்து விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மனைவி, மூன்று மகன்கள், இரண்டு மகள்கள், பெற்றோர், ஒரு சகோதரன் மற்றும் இரண்டு சகோதரிகளை விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூம் அவர்கள் ஒரு முன்னுதாரண அஹ்மதியாக திகழ்ந்தார்கள். மனிதகுலத்திற்கு தொண்டாற்றக்கூடிய அளவற்ற ஆர்வம் அவர்களிடத்தில் இருந்தது.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* மர்ஹூம் அவர்கள் என்னை சந்திக்கும் போது ஏழு கண்டங்களின் சிகரங்களை அடைந்து அவற்றில் அஹ்மதிய்யத்தின் கொடியை பறக்க விடுவதற்கு அனுமதி பெற்றார். நான் அவருக்கு மறுப்பு கூறிவிடக் கூடாது என்று அவர் அஞ்சியுள்ளார். (உங்களால் அந்த சிகரங்களுக்கு) செல்ல முடியும் என்றால் கொடியை நடுமாறு நான் அவரிடம் கூறினேன். என்னைப் பொறுத்தவரை நிச்சயமாக நல்ல நோக்கத்துடன் ஆர்வத்துடன் இஸ்லாம், அஹ்மதிய்யத் மற்றும் இறைவனின் ஏகத்துவத்தின் செய்தியை எட்ட வைப்பதற்கு முயற்சி செய்துள்ளார்கள். அதில் முயற்சியும் பெற்றுவிட்டார்கள். அந்த நோக்கத்தை அடையும் பயணத்தில் அல்லாஹ்வின் சன்னிதியில் ஆஜராகியும் விட்டார்கள். அவர் நிச்சயமாக ஷஹாதத்தின் அந்தஸ்தைப் பெற்றிருப்பார். அல்லாஹ் அவரை ஷஹீதுகளுடன் இணைப்பானாக!

**இரண்டாவது ஜனாஸா,** மதிப்பிற்குரிய அமத்துன் நூர் சாஹிபா அவர்கள் ஜூன் 15 ஆம் தேதி வாஷிங்டன் அமெரிக்காவில் மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். மர்ஹூமா அவர்கள் மவ்லவி அப்துல் பாக்கி சாஹிபின் மகனாகிய டாக்டர் அப்துல் மாலிக் ஷமீம் சாஹிபின் மனைவியாவார். மர்ஹூமா அவர்கள், ஸாஹிப்ஸாதி அமத்துர் ரஷீத் பேகம் சாஹிபா மற்றும் மியா(ன்) அப்துர் ரஹ்மான் சாஹிப் ஆகியோரின் மகள் ஆவார்கள். மர்ஹூமா அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகள் வழி கொள்ளுப் பேத்தியும், தாய்வழி பாட்டனார் வகையில் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கொள்ளுப் பேத்தியும் ஆவார்கள். மர்ஹூமா அவர்கள், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) மற்றும் ஸய்யிதா அமத்துல் ஹய் சாஹிபா ஆகியோரின் பேத்தியும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான பீஹாரைச் சேர்ந்த ஹஸ்ரத் **Professor** அலீ அஹ்மத் சாஹிப் அவர்களின் மகன்வழி பேத்தியும் ஆவார்கள்.

**மூன்றாவது ஜனாஸா,** சிறப்பு பாதுகாப்பு அதிகாரியான மதிப்பிற்குரிய நாஸிர் அஹ்மத் கான் சாஹிப் பஹாதுரே ஷேர் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய பிஸ்மில்லாஹ் பேகம் சாஹிபா அவர்களுடையதாகும்.

**நான்காவது ஜனாஸா,** ராவல்பிண்டியைச் சேர்ந்த சவுத்ரி அப்துல் ஃகனீ சாஹிபின் மகனாகிய மதிப்பிற்குரிய கர்னல் ஜாவீத் ருஷ்தீ சாஹிப் அவர்களுடையதாகும்.

*ஹுஸூர் அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் பாவமன்னிப்பிற்காகவும், தகுதிகள் மேலோங்கவும் துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ
يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمکم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى
وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**